**பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை: 130** **நாள்: 09.07.2026**

## பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான சங்க இலக்கியம் கற்பித்தல் (இணைய வழி)

## Sangam Literature Teaching for School Tamil Teachers (Online)

### பயிலரங்கம் – 11

### (16.07.2026 – 22.07.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழியாக இருப்பது மட்டுமல்லாமல் பன்னெடுங்கால இலக்கிய இலக்கண மரபுகளைக் கொண்டுள்ளது. இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் தோன்றியது என்பதை, **‘இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்’** என்பார் நன்னூலார். இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். தமிழில் இலக்கியத்தைச் சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், நவீன இலக்கியம் என வகைப்படுத்துவர். இவற்றுள் சங்க இலக்கியமானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அகத்தையும் புறத்தையும் நெறியாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழரின் வாழ்வியலை எடுத்துக் கூறுவதாகும். ஆகையினால் இவ்விலக்கியத்தின் வளம், சங்கத் தமிழரின் தொல் அறிவு போன்றவற்றினை அனைவரும் அறிந்து கொள்ளவது இன்றியமையாத ஒன்றாகும். அதனைக் கருத்தில் கொண்டு பள்ளிகளில் பயிலும் இளம் மாணாக்கர்களின் மனதில் தமிழரின் தொன்மையான இலக்கியங்களைப் பதிய வைத்திட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு அம்மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்காகப், **‘பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான சங்க இலக்கியம் கற்பித்தல்’** என்னும் பொருண்மையில் அமைந்த பயிலரங்கை இணைய வழியில் நடத்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. பயிலரங்கில் இத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

இப்பயிலரங்கு 16.07.2026 முதல் 22.07.2026 வரை 07 நாள்கள் இணைய வழியில் நடைபெறவுள்ள நிலையில் **பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்கள்** மட்டும் கலந்து கொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: **250.**
- பயிரலரங்கு நடைபெறும் நாள்கள்: **16.07.2026 முதல் 22.07.2026 வரை 7 நாள்கள்.**
- பயிலரங்கு நேரம்: **மாலை 06.30 – 08.30.**
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை **https://forms.gle/WkSo9BRGgiBfBMDaA** என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 14.07.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் எற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 15.07.2026 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 14 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாகக் கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**